## யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன்- 2015
## Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் -II | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

- ❖ **ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**
- ❖ **ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்.**

1) உங்களுக்கு மிக நெருக்கமாக அமர்ந்திருக்கும் ஒரு மாணவனின் காதினுள் "பிள்ளை தனது தந்தையோடு கடற்கரைக்குப் போயிருக்கின்றார்" என இரகசியமாக கூறவும். இதை தமக்கு அருகில் இருக்கும் நபரின் காதினுள் கூற வேண்டும். இவ்வாறு வட்டமாக அமர்ந்திருக்கும் இறுதி நபரை சென்றடையும் வரை இரகசியம் பரிமாறப்பட வேண்டும். இறுதியில் முதல் நபருக்கு வழங்கப்பட்ட இரகசியம் இறுதி நபரிடம் வித்தியாசமானதாக வந்தடைந்ததை அவதானிக்க முடிந்தது.

   i) "சீனர்களின் இரகசியம்" என்ற மேற்படி தொடர்பாடல் செயற்பாடு தொடர்புபட்டமையும் தொடர்பாடல் வடிவத்தையும், அழைக்கப்படும் வழிமுறையையும் பெயரிடுக.

   ii) மேற்படி செயற்பாட்டின் போது முதல் நபருக்கு வழங்கப்பட்ட இரகசியம் இறுதி நபரிடம் சென்றடையும் போது திரிபுபட்டமைக்கு ஏதுவாக அமையக்கூடிய நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

   iii) "நிறுவனம் ஒன்றில் முறைசார், முறைசாரா குழுக்கள் இயங்குகின்றன. முறைசாரா குழுக்களின் பிரதான தொடர்பாடல் வடிவமாக முறைசாரா தொடர்பு பயன்படுத்தப் படுகின்றது" இதனடிப்படையில் முறைசாரா தொடர்பு வலுப்பெறுவதற்கு ஏதுவாக அமையக்கூடிய மூன்று காரணிகளைக் குறிப்பிட்டு, சுருக்கமாக விளக்குக.

   iv) முறைசாரா குழுக்களின் தொடர்பு செயற்பாடுகளினால் ஏற்படக்கூடிய எதிர்மயமான விளைவுகள் நான்கை குறிப்பிட்டு, அவற்றை இழிவளவாக்கப் பயன்படுத்தக்கூடிய வழிமுறைகளை இரு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

2) **"வளர்முக நாடுகளின் அதிகரித்த வன்செயல் நிலைமைகட்கு, தொலைக்காட்சியும், சினிமாவும் காரணம் என பல ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன"**

   i) தொலைக்காட்சி, பத்திரிகை ஊடகங்களின் மூலம் வன்முறை புகுத்தப்படும் வழிமுறைகளைப் பெயரிடுக.

   ii) சிறுவர்கள் மத்தியில் வன்முறைப் போக்குகளை ஊடகங்கள் வளர்ப்பதற்கு ஏதுவாக அமையும் இரு காரணிகளையும் குறிப்பிடுக.

   iii) ஊடக வன்செயல்களை விளங்கிக்கொள்வதற்கு ஊடாக அறிவுத்திறன்களை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை சுருக்கமாக விளக்குக.

   iv) பாடசாலையின் ஊடகக்கழகம் சிறுவர்களின் ஊடக அறிவு மட்டத்தை உயர்த்துவதற்கு கையாளக்கூடிய வழிமுறைகளை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

3) **"முரண்நிலைகள் யதார்த்தமானதும், வாழ்வுக்கு பாதகமானதாவும் அதே வேளை உத்வேகத்தையும் வழங்குகின்றன"**

   i) அன்றாட சமூக வாழ்வில் முரண்நிலைகள் தோன்றுவதற்கு ஏதுவாக அமையக் கூடிய நான்கு காரணிகளை பெயரிடுக.

   ii) நபர் ஒருவரிடம் முரண்நிலை உருவாவதற்கு காரணமாகும் மாஸ்கோ குறிப்பிடும் அடிப்டை தேவைகளை இரண்டு உதாரணங்களுடன் குறிப்பிடுக.

   iii) குழு. மற்றும் சமூகங்களுக்கு இடையில் ஏற்படும் முரண்நிலைகளைத் தீர்ப்பதற்குப் பயன்படும் இணக்கப்பாட்டு குழுச் சட்டத்தின் மூன்று பிரதான வழிமுறைகளையும் பெயரிட்டு, சுருக்கமாக விபரிக்குக.

   iv) "பலவீனமான தொடர்பாடல் நிலைமைகள் நபரிடை முரண்நிலைக்கு அடிப்படையாகின்றன" அந்த வகையில் வினைத்திறன் மிக்க தொடர்பாடுபவரிடம் அவதானிக்கப்படக் கூடிய திறன்களை நான்கு அம்சங்களில் விபரிக்குக.

4) **"நபர் ஒருவரின் அறிவு, மனப்பாங்கு, நடத்தைகளை மாற்றுவதில் ஆக்கபூர்வமான தொடர்பு வலுவுள்ளதாக அமைகின்றது"**

i) நவீன ஆக்கபூர்வதான தொடர்பாடல் வடிவங்கள் இரண்டினைப் பெயரிடுக.

ii) மரபுசார்ந்த ஆக்கபூர்வமான தொடர்பாடல் வெளியீடுகளின் இரு தனித்துவமான இயல்புகளை குறிப்பிடுக.

iii) ஊடக விடயங்களை விமர்சனம் செய்வதன் ஊடாக கிடைக்க கூடிய அனுகூலங்களை மூன்று காரணிகளை அடிப்படையாக கொண்டு விளக்குக.

iv) ஆரோக்கியமான விமர்சன கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கு ஊடக விமர்சகரிடம் காணப்பட வேண்டிய திறன்களை நான்கு அம்சங்களின் கீழ் விபரிக்குக.

5) **"நிறுவன மதிப்பை உயர்த்தல் பொதுசனத்தொடர்பு ஆகும். வர்த்தக நோக்குடன் திட்டமிட்டு இடம்பெறுவது விளம்பரம் ஆகும்"**

i) நிறுவனம் ஒன்றின் பொதுசனத்தொடர்புக்கான அடிப்படை நோக்குகள் இரண்டினைக் குறிப்பிடுக.

ii) நிறுவனங்களில் பொதுசனத்தொடர்பை நடைமுறைப்படுத்த பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள நான்கு ஆளணியினரைப் பெயரிடுக.

iii) விளம்பரம் மூலம் ஏற்படும் தாக்கங்களை பின்வரும் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

அ) பொருளாதார தாக்கங்கள்

ஆ) சமூகத் தாக்கங்கள்

இ) உளவியல் சார் தாக்கங்கள்

iv) பொதுசனத்தொடர்பு செயன்முறைக்காக "ஊடக அறிவித்தல்" கருவியை பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்களை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

6) **"தேசிய அபிவிருத்திக்கு வெகுசன ஊடகங்கள் மற்றும் தொடர்பாடல் செயன்முறையின் வகிபங்கு முக்கியமானது"**

i) சீன அபிவிருத்தி தொடர்பாடல் மாதிரி உருவாக்கத்திற்கான அடிப்படைக் கோட்பாட்டைப் பெயரிடுக.

ii) அபிவிருத்திக்குத் துணையாகும் தொடர்பாடல், அபிவிருத்திக் கல்விக்கான தொடர்பாடல் எண்ணக்கருவை வேறுபடுத்தி அறிமுகம் செய்க.

iii) அபிவிருத்தி தொழிற்பாட்டுக்கு சமூக வானொலி முக்கியம் பெறும் தன்மையினை மூன்று காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

iv) சுற்றுசூழல் அபிவிருத்தி தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான தொடர்பாடல் வழிமுறைகளை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு உதாரணங்களுடன் விபரிக்குக.

7) i) மொழியின் ஏற்புடைமை, ஏற்புடமையின்மை எண்ணக்கருவை அறிமுகம் செய்க.

ii) தொடர்பாடல் ஊடகமாக மொழியைப் பயன்படுத்தப்படுகின்ற போது உருவாகக்கூடிய நான்கு இடையூறுகளை எடுத்துக்காட்டுடன் குறிப்பிடுக.

iii) பிரதான நிலைப்பட்ட வானொலி (Mainstream Radio) மொழிப் பயன்பாட்டில் அவதானிக்கப்படக்கூடிய தனித்துவமான மூன்று அம்சங்களைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

v) ஊடக கலாசாரம், உலகமயமாக்கல், புகழ்கலாசார பின்னணியினால் மொழிப் பயன்பாட்டில் ஏற்பட்டு வரும் எதிர்விளைவுகளை (Negative Impacts) நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.